கேரளாவில் நெம்மாறா வட்டத்தில் கண்ணகி வழிபாடு

ஆய்வாளர்

பிரியதர்ஷினி கோ.சு

ஆய்வு நெறியாளர்

முனைவர்.ச.குருஞானாம்பிகா

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்

முனைவர்பட்ட ஆய்விற்குரிய (**Ph.D.**) ஆய்வுச்சுருக்கம்

தமிழ்த்துறை,

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,

கோயம்புத்தூர் - 43.

2018 - 2021

ஆய்வுச் சுருக்கம்

முன்னுரை

இளங்கோவடிகளின் செழுந்தமிழால் உருவானது ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம். இக்காப்பியம் தமிழ் இலக்கியச் செம்மைக்கு ஓர் அடையாளமாக விளங்குகிறது. காப்பியத்தில் இடம்பெறும் ஒவ்வொரு பாத்திரமும் சிந்திப்பதற்கும் மேலான உயர்பண்புகளைக் கொண்டு படைக்கப்பட்டுள்ளன. அவர்களுள் முதன்மைப் பாத்திரமான கண்ணகி பல்வேறு கதைகளால் அறியப்பட்டு, பல்வேறு இடங்களில் பத்தினித் தெய்வமாக வழிபடப்படுகிறாள்.

குடிமக்கள் காப்பியமாகிய சிலப்பதிகாரம், சாதாரணமான குடிமகளான கண்ணகியைக் குடிமகளாகவே கதையில் கொண்டு சென்று, இறுதியில் பத்தினித் தெய்வமாக உயர்த்தியிருக்கிறது. இன்றும் கண்ணகியைக் கேரளாவிலும் இலங்கையிலும் பத்தினித் தெய்வமாக வழிபடுகின்றனர். கேரளாவில் கண்ணகி பெருந்தெய்வமாக வழிபடப்படுகிறாள். கண்ணகியை சிவபெருமானின் மனைவியான பார்வதி தேவியின் மறு அவதாரமாகக் காணுகின்றனர் கேரள மக்கள். கண்ணகியை சிவபெருமானின் மகளாகவும் கருதி கேரளத்தின் பெரும்பாலான இடங்களில் வழிபடுகின்றனர்.

தமிழகத்தில் மாரியம்மன் வழிபாடு மக்களால் பெரிதும் பக்தியோடு நிகழ்த்தப்படுவது போல, கேரளாவில் மிகவும் ஆற்றல் மிக்க தெய்வமாக 'பகவதி தேவி' அறியப்படுகிறாள். கண்ணகியைப் பெருந்தெய்வமாக வழிபட்டாலும் அங்குள்ள மக்கள் ஊர்த் தெய்வமாகவும், வெகுசனத் தெய்வமாகவும், குலதெய்வமாகவும், வீட்டுத் தெய்வமாகவும் வழிபடுகின்றனர். இவ்வழிபாடானது தமிழக கேரள எல்லைப் பகுதிகளில் காணப்படுகின்றன. கேரள மாநிலம் பாலக்காடு வட்டத்தின் ஒரு பகுதியான 'நெம்மாறா' என்ற இடத்தில் அமையப்பெற்றிருக்கின்ற பகவதி அம்மன் கோயில்களை ஆய்வுக்களமாக எடுத்துக் கொண்டு, அந்தக் கோயில்களின் தோற்றக் கதைகளையும், கண்ணகிக்கு செய்யப்படும் வழிபாட்டு முறைகள், சடங்கு முறைகள் மற்றும் திருவிழாக்கள் ஆகியவற்றையும் கண்டறிவதாக இவ்வாய்வேடு அமைகிறது.

ஆய்வுப் பொருள்

"கேரளாவில் நெம்மாறா வட்டத்தில் கண்ணகி வழிபாடு" என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்படும் இவ்வாய்வு குடிமக்கள் காப்பியமாம் சிலப்பதிகாரத்தின் தலைவியும், குடிமகளுமான கண்ணகி, இலங்கையிலும் கேரளாவிலும் தெய்வமாக வழிபடப்பட்ட இடங்களையும், வழிபாடு, சடங்கு முறைகள், கேரளத்தில் கண்ணகிக்கான தனிப்பட்ட தோற்றக் கதைகள், வழிபடும் முறைகள், கோயில்களின் சிறப்புகள், நடத்தப்படும் திருவிழாக்கள், சடங்குகள் அதனால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய நம்பிக்கைகள்

போன்றவற்றை எடுத்துரைக்கிறது. இதன் வழியாக, கேரள நாட்டுப்புற மக்களின் வாழ்க்கைப் பண்பாட்டினை இவ்வாய்வு எடுத்தியம்புகிறது.

மேலும் கேரள மக்களின் வாய்மொழி இலக்கியங்களுள் ஒன்றான ‘தோற்றம் பாட்டு’, கண்ணகியின் தோற்றக் கதையைக் கூறுகிறது. இப்பாடலானது பாலக்காடு நென்மாறா பகுதியில் பாடப்படும் விதம், நாள், பாடப்படும் மக்களினம், கண்ணகி கதைப்பாடலில் இடம்பெறுகின்ற காவல் தெய்வங்கள், வழிபாடுகள், சடங்குகள் ஆகியவற்றால் கேரள சமுதாயத்தில் பதிந்திருக்கிற நம்பிக்கைகள், அதனால் உண்டாகும் நன்மைகள் போன்றவை ஆய்வுப் பொருளாக அமைகின்றன.

ஆய்வு நோக்கம்

சிலப்பதிகார காப்பியத் தலைவியான கண்ணகி கேரள மக்களால் பகவதி எனும் பெண் தெய்வமாக வழிபடப்படுவதும், கேரள மாநில பாலக்காடு வட்டத்தின் ஒரு பகுதியான “நெம்மாறா” எனும் சிற்றூரில் கண்ணகி வழிபாடு குறித்த செய்திகளை அறிதலும், பகவதியான கண்ணகியை ஊர்த் தெய்வமாக வழிபடும் முறைகள், வீட்டுத் தெய்வமாக வழிபடும் முறைகள் மற்றும் காவல் தெய்வமாக அறியப்படுதலும், தமிழ்நாட்டில் வீரர்களுக்கு நடுகல் நடும் மரபு மாறி, பெண்ணுக்கும் கல்நடும் மரபு மாற்றம் (புதுமை) நிகழ்ந்துள்ளதும் ஆகிய இவற்றைக் கள ஆய்வின் மூலம் கண்டறிவதும் இவ்வாய்வின் நோக்கமாக அமைந்திருக்கிறது.

கருதுகோள்

தமிழ்நாட்டில் வணிகர் குலத்தில் பிறந்த கண்ணகி கேரளத்திலும், இலங்கையிலும் செல்வாக்குப் பெற்று விளங்கிய நிலையைக் களஆய்வின் வழி வெளிப்படுத்துவதனைக் கருதுகோளாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஆய்வு ஆதாரங்கள்

உ.வே.சா மற்றும் ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் ‘சிலப்பதிகாரம் மூலமும் உரையும்’ என்னும் நூலும், கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டம், நெம்மாறா பகுதியைச் சேர்ந்த பகவதி கோயில்கள் குறித்த தகவல்கள், அங்கு நடத்தப்படும் வழிபாடுகள், திருவிழாக்கள் போன்றவை களஆய்வின் வாயிலாக தொகுக்கப்பட்டத் தரவுகள் முதன்மை சான்றாதாரங்களாக அமைகின்றன.

‘கண்ணகி’ குறித்த பல ஆய்வு நூல்கள், பகவதி குறித்த பிறமொழி நூல்கள், வழிபாட்டு முறைகள், திருவிழாக்கள், நம்பிக்கைகள், சடங்குகள் தொடர்பான ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வேடுகள் போன்றவை துணைமைச் சான்றாதாரங்களாக அமைகின்றன.

ஆய்வு முன்னோடிகள்

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 2011ஆம் ஆண்டு மு.சந்திரன் என்பவரின் **“எழுத்திலக்கிய மரபிலும் வாய்மொழி மரபிலும் கண்ணகி கதை”** என்ற தலைப்பில் முனைவர் பட்டத்திற்காக அமைந்த ஆய்வேடும், கேரள பல்கலைக்கழகத்தில் 2020ஆம் ஆண்டு ச.உமாமகேஸ்வரி என்பவரின் **“கேரள நாட்டுப்புறப் பாடல்களில் சிலப்பதிகாரத்தின் தாக்கம்”** என்ற தலைப்பில் முனைவர் பட்டத்திற்காக அமைந்த ஆய்வேடும் இவ்வாய்வின் முன்னோடி ஆய்வேடுகளாகக் கொள்ளப்படுகின்றன.

ஆய்வு எல்லை

இவ்வாய்விற்கு எல்லையாக இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகார காப்பியமும், களஆய்வு எல்லையாக கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டத்தைச் சேர்ந்த நெம்மாறாப் பகுதியும் வரையறை செய்யப்படுகிறது.

அவ்வகையில் இவ்வாய்விற்கு 23 கிராமப் பஞ்சாயத்துகளைச் சேர்ந்த 31 குறும்ப பகவதிக் கோயில்களும், பகவதியின் காவல் தெய்வங்களை வழிபடும் 150 குடும்பங்களும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

ஆய்வு அணுகுமுறை

ஆய்வில் களஆய்வுமுறை முக்கிய இடம் வகிக்கிறது. உற்றுநோக்கல் முறை, பேட்டிமுறை முதலிய கள ஆய்வு முறைகளும், வினாநிரல் முறையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வழிபாடுகள், திருவிழாக்கள் ஆகியவற்றைக் குறித்து விளக்குவதற்கு விளக்கமுறை அணுகுமுறையும், சிலப்பதிகாரத்தில் கூறும் கண்ணகி கதையையும், கேரள வாய்மொழி இலக்கியங்கள் கூறும் கண்ணகி கதையையும் ஒப்பிடுவதற்கு ஆங்காங்கே ஒப்பீட்டுமுறை ஆய்வு அணுகுமுறையும் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஆய்வுப் பகுப்புமுறை

இவ்வாய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவை,

இயல் - 1: சிலம்பு காட்டும் கண்ணகி

இயல் - 2: அயலகத்தில் கண்ணகியின் செல்வாக்கு

இயல் - 3: நெம்மாறா பகுதியில் பகவதி கோயில்கள்

இயல் - 4: வழிபாட்டு மரபுகளில் கண்ணகி

ஆய்வேட்டின் இறுதியில் ஆய்விற்குத் துணைநின்ற நூற்பட்டியல் இடம்பெற்றுள்ளன. நெம்மாறாவில் உள்ள பகவதி கோயில்களின் படங்களும், களஆய்வின்போது எடுத்த படங்களும் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

இயல் - 1: சிலம்பு காட்டும் கண்ணகி

சிலப்பதிகாரக் காப்பியத்தில் கண்ணகியின் தோற்றம், இளங்கோவடிகள் கண்ணகியை அறிமுகப்படுத்தும் விதம், வருணனைகள், கண்ணகியின் பண்புகள், கற்பின் மேன்மை போன்றவை இவ்வியலில் இடம்பெறுகின்றன.

கண்ணகி, பெண்களும் மயங்கும் பேரழகுடையவளாகத் திகழ்தலும். கண்ணகியின் திருமணத்தன்று மாதர்கள், அவளை திருமகளைப் போன்ற அழகும், அருந்ததியைப் போன்ற கற்புத்திறமும் வாய்ந்தவளாக தொழுது போற்றுமளவு தோற்றப்பொலிவு பெற்றிருந்தமையை சிலப்பதிகாரம் எடுத்துரைக்கிறது.

கண்ணகியின் திருமணம் ஆரிய முறைப்படி நடைபெற்றது. கண்ணகியின் திருமணத்தில் அறனறிந்த பார்ப்பனர், திருமணத்திற்கு மறைநூலிற் சொல்லப் பெற்றுள்ள நெறிமுறையைக் கடைப்பிடித்து, திருமணம் செய்து வைத்தனர். கோவலனும், கண்ணகியும் வேள்வித் தீயை வலம் வந்தனர். இருவரின் விருப்பத்திற்கேற்பவே திருமணம் நடத்தது என்கிறார் இளங்கோவடிகள். கேரளத்தில் கண்ணகியின் விருப்பமில்லாமல் இத்திருமணம் நடந்ததாகக் கண்ணகி கதைப்பாடல் கூறுகிறது.

கண்ணகியின் இல்லற மாண்புகள்

தலைமகற்குரிய பண்புகளாக அச்சப்படுதல், நாணப்படுதல் மடம் என்னும் பேதைமையாகப் பேசும் குணம் ஆகியவற்றைத் தொல்காப்பியர் எடுத்துரைத்துள்ளார். இதனை,

> **“அச்சமும் நாணும்மடனும் முந்துறுதல்**
> **நிச்சமும் பெண்பாற்குரிய என்ப”** **தொல், களவு: (96)**

என்ற நூற்பா வழி அறியமுடிகிறது. கண்ணகி, அச்சகுணம் கொண்டவளாகக் காப்பியத்தின் முன்பாதியில் காட்டப்பெறுகின்றாள். கண்ணகி, மதுரை மாநகரையே அழிக்கும் ஆற்றல் பெற்றிருந்தும், வம்பப்பரத்தையும் வருமொழியாளனும் கூறிய இகழ்ச்சி மொழியைக் கேட்டு செவிகளைக் கைகளால் பொத்தித் தன் கணவன் முன் அஞ்சி நின்றாள் என்பதை நாடுகாண் காதையில் காட்டி, கண்ணகியின் அச்ச குணத்தை எடுத்துரைக்கிறார் இளங்கோவடிகள்.

பொறுமைப் பண்பு

கண்ணகி, இல்லத்தை விட்டு வெளிவந்து, வெளியில் இயங்கும் உலகைப் பற்றி அறிந்தவளில்லை. அதோடு, இளம் வயதிலேயே திருமணம் நடைபெற்றதாலும், உலக அனுபவமின்மையால் பேதைமை குணம் கொண்டவளாகத் திகழ்கிறாள்.

கோவலன் பொருள் தேடும் பொருட்டு மதுரைக்குச் செல்ல அவனுடன் சென்ற கண்ணகி புகாரைவிட்டுச் சிறிது தூரமே நடந்திருக்க, நீண்ட தூரம் சென்றவளாக எண்ணி, மதுரை மூதூர் யாதென கோவலனிடம் வினவினாள். கண்ணகியின் பேதைமைத்

தன்மையையும், 'வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்' என்று கவுந்தியடிகள் கூறும்பொழுது அவளுடைய சீறடிகளின் மென்மைத் தன்மையையும் அறிய முடிகிறது. அத்தகைய வசதியோடு வாழ்ந்தாலும், கணவனுக்காகப் பொறுமையோடு காத்திருந்து நம்பிக்கையோடு, அவன்கரம் பற்றி கோவலன் அழைத்தவுடன் மறுக்காமல் உடன் மதுரைக்குச் செல்வதன் வழியாக அவள் உயர்ந்த மாண்புகளை அறிய முடிகிறது.

கண்ணகியின் ஆற்றியிருக்கும் பண்பு

கோவலனைப் பிரிந்த கண்ணகி துயர மிகுதியால் ஒப்பனை செய்து கொள்ளாமல் வருந்தித் துன்பமுற்றாள். கோவலனைப் பிரிந்த கண்ணகி, சிலம்பு, மேகலை, குண்டலம், போன்ற அணிகலன்களை அணியாமலும், நெற்றியில் திலகம் இடாமலும், கண்களுக்கு அஞ்சனம் எழுதாமலும், தனிமைத் துயரால் வருந்தினாள் என்பதை அந்திமாலைச் சிறப்புச் செய் காதை கூறுகிறது. இது கண்ணகியின் பிரிவுத் துன்பத்தையும், அதனால் அவள் தன்னை அழகுபடுத்தி ஒப்பனை செய்து கொள்ளாததையும் புலப்படுத்துகிறது.

விருந்து போற்றுதல்

கணவன், மனைவி இருவரும் இணைந்து இல்லறக் கடமைகள் ஆற்றுவதுதான் பழந்தமிழர் மரபு. அறவோர் துறவோர்க்கு ஈதல், விருந்தினர்களைப் பேணுதல் போன்ற அறச் செயல்களை இருவரும் சேர்ந்தே ஆற்ற முடியும். பிரிந்திருக்கும் நிலையில் இவற்றைச் செய்ய இயலாது. அதனால் கண்ணகியும் கணவனைப் பிரிந்ததால் இல்லறக் கடமைகளை ஆற்ற முடியாமல் வருந்தினாள்.

கோவலன், பரத்தையின் பொருட்டு பிரிந்ததால் இல்லறக் கடமைகளை ஆற்ற முடியாமல் கண்ணகி கவலையுற்றாள் என்பதை கொலைக்களக் காதையில் அறஞ்செய்ய இயலாமைக்கு வருந்துவதன் மூலமாக அறிய முடிகிறது.

கண்ணகியின் அறச்சீற்றம்

தனக்குத் தீங்கிழைத்த பாண்டியன் நாட்டை ஆளும் அரசனாக இருந்த போதிலும், கண்ணகி அஞ்சாமல் எதிர்த்து நின்று வெஞ்சினத்துடன் தூற்றினாள். கண்ணகி தன் கணவன் கோவலனைக் கள்வன் என்று கருதி மரண தண்டனை வழங்கிய பாண்டிய மன்னனை 'முறையறிந்த மன்னனே' என்று அறந்தவறிய ஆட்சியை எதிர்த்து வழக்குரைக்கிறாள்.

பத்தினிப் பெண்ணாகிய கண்ணகியின் சாபம் மதுரையையே அழித்ததாக இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். கண்ணகி வஞ்சினம் உரைத்துத் தன்னுடைய இடதுமுலையைத் திருகி எறிய, தீக்கடவுள் கண்ணகிக்காக மதுரை நகரை எரித்ததாகக் கூறப்படுகிறது.

கண்ணகி வழக்குரைக்க வந்தபொழுது, அவளுடைய கண்களில் கண்ணீரைக் கண்டவுடனே பாண்டிய மன்னன் தோற்று, அவள் சொற்கள் செவிகளில் விழுந்த பொழுதே உயிர்விட்டதாக அறியப்படுகிறது.

இரக்கக் குணம்

கண்ணகி மிகுந்த இரக்க குணம் உடையவள். மதுரையை எரிக்கும்பொழுது 'பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்கள், முதுமையாளர், குழந்தைகள் என்னும் இவரைக் கைவிட்டுத் தீய தன்மையுடையவர் பக்கமே சேர்க' என்று தீக்கடவுளை ஏவினாள் என்பதை, வஞ்சின மாலை குறிப்பிடுகிறது. இதன் மூலம் நல்லோரையும், இயலாதோரையும் காத்து அவர்களைத் துன்புறுத்தாத இரக்க குணத்தைக் கொண்டவளாக விளங்கியமையை அறிய முடிகிறது.

அறத்திற்குப் புறம்பாக இழுக்கு நேரிடும்போது எதிர்த்து நிற்பவளாக, நற்பண்புகளால் நிறைந்த கண்ணகி, இல்லற மாண்புகளைப் போற்றுபவளாக, அகத்திலும், புறத்திலும் முன்மாதிரிப் பெண்ணாக விளங்கியதால், மக்கள் அவளை தெய்வநிலைக்கு உயர்த்தி வழிபடுகின்றனர். கண்ணகி மனிதநிலையில் இருந்து தெய்வநிலைக்கு உயர்ந்து, மக்களால் வழிபடப்படுதலை இவ்வியல் எடுத்தியம்புகிறது.

இயல் 2: அயலகத்தில் கண்ணகியின் செல்வாக்கு

தமிழகத்தைத் தவிர, கண்ணகியைத் தெய்வமாகக் கொண்டு காலங்காலமாக வழிபட்டு வரும் இடங்களுள் கேரளமும், இலங்கையும் பெரும்பங்கு வகிக்கின்றன. தமிழ்க் காப்பியத் தலைவி கண்ணகியை அயலகங்களான கேரளாவிலும், இலங்கையிலும் வழிபட்டதற்கான வரலாறுகள், வழிபடுமுறைகள் குறித்த தரவுகள் களஆய்வின் மூலமாகவும் பல்வேறு ஆய்வு நூல்கள் மூலமாகவும் தொகுக்கப்பட்டுள்ளன.

தாய்த்தெய்வ வழிபாடு

தாய்த்தெய்வ வழிபாடு மிகப் பழங்காலத்திலேயே தோன்றி தேவி என்றும், அம்மன் என்றும் இன்றும் வழங்கப்படுகின்றது. கிராமங்களில் உள்ள பாமர மக்கள் இன்றும் தாய்த்தெய்வத்தையே பல பெயர்களில், பல உருவங்களில் வைத்து வழிபட்டு வருகின்றனர்.

தமிழகத்தில் தாய்த்தெய்வ வழிபாட்டின் வளர்ச்சியின் வரலாற்றில் சிலப்பதிகாரத்தின் தலைவியான கண்ணகி தாய்த்தெய்வமாக மாறினது முக்கியமான செய்தியாகும். கண்ணகியின் வழிபாடு இன்று கேரளத்தில் பகவதி வழிபாடாக மாறி பெருமளவில் பாமர மக்களிடையே நிலவி வருகின்றது.

கொல்லிப்பாவை வழிபாடு

சுவரிலிருக்கும் பாவையைத் தொழும் வழக்கம் இன்றும் கேரளத்தில் காண முடிகிறது. ஒவ்வொரு வீட்டிலும் மச்சிலம்மா என்ற தாய்த்தெய்வம் மேற்குச் சுவரில் இருப்பதாகக்

கருதுவர். அதற்காகச் சுவரில் ஒரு மாடம் இருக்கும். அந்தத் தெய்வத்தை முத்தச்சி (மூத்த தாய்), சீபோதி (ஸ்ரீ பகவதி) என்றும் அழைப்பர். கன்னியாகுமரி தெய்வத்தை கன்னியாகுமரி பகவதி என்று தொழும் வழக்கமும் கேரளத்தில் இன்றும் உள்ளது.

தமிழிலக்கியங்கள் கொல்லிப்பாவை என்றொரு தாய்த்தெய்வத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

பயங்கெழு பலவின் கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதிதியல் பாவை
வரிகதி ரிளவெயிற் றோன்றி யன்னநின்''

-நற்றணை,192

என்ற நற்றிணைப் பாடலில் கொல்லி என்ற குடவரையில் எழுதிய பாவையென்றும், பூதம் புணர்ந்த பாவையென்றும்,

பெரும்பூட் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்
கருங்கட் டய்வங் குடவரை யெழுதிய
நல்லியற் பாவை யன்னவிம்

-குறுந்தொகை,89

என்ற குறுந்தொகைப் பாடலிலும்,

"களிறுகெழு தானைப் பொறையன் கொல்லி
யொளிறுநீ ரடுக்கத்து வியலகம் பொற்பக்
கடவுளெழுதிய பாவையின்''

-அகம்,62

என்ற அகநானூற்றுப் பாடலிலும் கடவுளாகவே எழுதிய பாவை என்றும் கூறப்பட்டுள்ளது.

கொல்லிப் பாவையை திருமகள் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. அதனால், கொல்லிப் பாவையும் காடுகிழாள் போன்ற ஒருவகைத் தாய்த் தெய்வம் என்று அறிய முடிகிறது. கேரளாவிலுள்ள காடுகளிலும், மலைகளிலும் இந்தத் தாய்த் தெய்வம் பழங்குடி மக்களால் புள்ளிக் கருங்காளி என்று வழிபடப்படுகின்றாள். இவளுடைய வாகனம் புள்ளியுடைய புலி, ஆடையும் புலித்தோல். கொல்லி என்பதற்குப் புலி என்றும் பொருள் கொள்ளப்டுகிறது. கொல்லிப்பாவை இன்றும் கொல்லி மலையில் தோன்றிய புகழ்பெற்ற தாய்த்தெய்வம் ஆகும்.

மதுராபதி தெய்வம்

சிலப்பதிகாரத்தில் கூறப்படும் மதுராபதி என்ற தேவதையும் தாய்த் தெய்வமேயாகும். சிலப்பதிகாரத்தில் மதுரையை விட்டு மதுராபதி நீங்குவதாகக் கூறியது அதுபோன்ற ஒரு கதையே. சிலப்பதிகாரம் வணிகரின் மகளான கண்ணகி தாய்த்தெய்மானதைச் சிறப்பித்துப்

பாடிய நூலாகையால் கண்ணகி தெய்வத்திற்கு முன்னால் மதுராபதி சக்தியற்றவளாகிவிட்டாள் என்று காட்டுகின்றது.

கேரள பகவதி வழிபாடு

'கடவுளின் இருப்பிடம்' என்றழைக்கப்படும் கேரளா உருவெடுக்கக் காரணமாக இருந்தவர், மகாவிஷ்ணுவின் அவதாரம் என்று கருதப்படும் பரசுராமர் என்று பல புராணக்கதைகள் கூறுகின்றன. இத்தகைய பெருமை மிகுந்த கேரளாவில் பகவதி கோவில்கள் ஏராளமாக இருக்கின்றன. கேரளாவில் உள்ள அம்மன்களுக்கு என்று தனிப் பெயரில்லை என்றாலும் அவர்கள் அனைவருமே தலப் பெயருடன் இணைத்து 'பகவதி' என்று அறியப்படுகின்றனர்.

கேரளத்தில் பகவதியை வழிபடும் வழக்கம் மிகவும் பரவலாகக் காணப்படுகிறது. இந்தப் பகவதி என்ற பெண் தெய்வம் ஒரு தாய்த்தெய்வமாகும். இந்தப் பகவதி கண்ணகியே என்று கருதுவர். கிராம மக்களிடையே பகவதி மிகச் சக்தி வாய்ந்த தெய்வமாகக் கருதப்படுகிறாள். கண்ணகியின் கதை தனியாக மலையாள நாட்டுப்புறப் பாடல்களில் வழங்குகின்றது. ஆனாலும் பகவதி வழிபாட்டில் கண்ணகி வழிபாடு இரண்டறக் கலந்துள்ளது என்பதற்குச் சில மறைமுகமான, உறுதியான சான்றுகள் இருக்கின்றன.

கேரளத்தில் கண்ணகி கதைகள், கோவலன் கதை, கண்ணகி கோயில்கள், கண்ணகியின் பெயர் மாற்றம், கதைப்பாடல்களான 'தோற்றம் பாட்டு', புள்ளுவன் பாட்டு, தன்னாரப் பாட்டு, நல்லம்மா பாட்டு, நல்லம்ம கத, சிலம்பு கத என பல மலையாள வாய்மொழி இலக்கியங்களும் எழுந்துள்ளன.

கண்ணகியின் பிரதான கோயில்களான ஸ்ரீ குறும்பை காவு, கொடுங்கல்லூர் குறும்ப காவு, ஆற்றுக்கால் பகவதி கோவில், முல்லைக்கல் குறும்பக்காவு குறித்த செய்திகளும் இவ்வியலில் கூறப்பட்டுள்ளன.

விஷாரிகாவு

வடமலையாள நாட்டில் பிரதானமான ஒரு பகவதி கோயில் கொயிலாண்டி என்ற ஊரில் உள்ள விஷாரிகாவு கோவிலாகும். "கொயிலாண்டி பந்தலாயினி கொல்லம்" என்றும் அழைக்கப்படும். விஷாரிகாவில் திருவிழா நாட்களில் பாலை மரத்திலிருந்துதான் ஊர்வலம் போகும். இந்த ஊர்வலத்தில் பகவதியின் தெய்வ உருவமோ, படிவமோ எடுத்துச் செல்லபடுவதில்லை. யானையின்மேல் ஒரு **'கொடுவாளே'** எடுத்துச் செல்லப்படுகிறது.

மலபாரில் பகவதி கோயில்களில் பல, குறிப்பிட்ட சில சாதியினர் மட்டுமே தொழுவதற்கு ஏற்பட்டதாகக் காணப்படுகிறது. ஆனால், விஷாரிகாவில் எல்லா சாதியினரும்

பங்கு கொள்வது சிறப்பாகக் கருதப்படுகிறது. பகவதியின் கொடுவாள் ஆண்டுதோறும் புதியதாக கொல்லனால் செய்யப்படுகின்றது.

செட்டியார்கள் சடங்கு

விஷாரிகாவில் செட்டியார்களின் சடங்குகள் மிகப் பிரதானமாகக் கருதப்படுகிறது. மிகக் குறைவாக இந்த செட்டியார் இனத்தவர் மாகி என்ற ஊருக்கு அருகிலும், தெல்லிச்சேரியிலும் உள்ளனர். இவர்களது மொழி மலையாளம் ஆகும். விஷாரிகாவு உற்சவம் இந்த செட்டியார்களுக்கு ஓலை அனுப்பி அழைப்பு விடுத்தபின்புதான் துவங்கும்.

இலங்கையில் கண்ணகி வழிபாடு

தமிழகத்தில் அழிந்துவிட்ட கண்ணகி வழிபாடு இந்தியாவின் அயல்நாடான இலங்கையிலும் அதிக அளவில் புகழ்பெற்று விளங்குகிறது. இலங்கையில் வடகிழக்குப் பகுதியில் கண்ணகிக்குக் கோயில்கள் அதிகமாக உள்ளன. இலங்கையில் தமிழர்கள் வாழக்கூடிய பகுதிகளில் கண்ணகி கோயில்கள் இருக்கின்றன. இவ்வழிபாட்டில் சிங்கள மக்களே அதிகளவில் ஆர்வம் காட்டி வருகிறாாகள். சிங்களவர்களின் முக்கியமான காவல் தெய்வமாக கண்ணகி (பத்தினித் தெய்யோ) விளங்குகிறாள். சிலப்பதிகாரத்தின் வாயிலாக அறிந்த கண்ணகி வழிப் பாட்டினை, இலங்கையிலும் பரவலாயின. கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் இலங்கைத் தமிழரும் சிங்களவரும் கண்ணகியைச் சீர்ம்பா, பத்தினித் தெய்யோ என்ற பெயர்களில் வழிபடத் தொடங்கினர். கி.பி.பதினாறாம் நூற்றாண்டில் கோவலன் கதை, கண்ணகி வழக்குரை, வைசிய புராணம், கண்ணுடையம்மன் பள்ளு என்று சிலப்பதிகாரத்தைத் தழுவி எழினும், சிலம்புக் கள்ளன், மரக்கலப் பாட்டு, கோவலன் கதை, நல்லம்மைப் பாட்டு என்று மேற்காட்டிய தமிழ் நூல்களைத் தழுவி, மலையாள மொழியிலும் கண்ணகி கதை இயற்றப்பட்டது.

இலங்கையில் அறியப்படுகின்ற கண்ணகிக் கதைகள், கண்ணகிக் கோயில்கள், கண்ணகை அம்மன் குளுத்திப் பாடல், அங்கணாமைக் கடவை, வற்றாப்பாழைக் கண்ணகை அம்மன் தோத்திரம். காவியம், பட்டிமேட்டுக் கண்ணகை அம்மன், தாண்டவன் வெளி, பட்டிநகர்க் கண்ணகை அம்மன் மழைக் காவியம், கண்ணகை அம்மன் அகவல், வெண்பா, மாவீட்டபுரம் காஞ்சிவார்ப்புத் தண்டற்பாட்டு, ஊர்சுற்று காவியம், கன்னன்குடா - மழைக்காவியம், வசந்தன் பாடல்கள், அம்மன் பள்ளு என கூறப்படுகின்ற கண்ணகி இலக்கியங்கள் குறித்த செய்திகள் இவ்வியலில் கூறப்பட்டுள்ளன.

இயல் - 3: நெம்மாறா பகுதியில் பகவதி கோயில்கள்

பாலக்காடு மாவட்டத்திலுள்ள நெம்மாறா வட்டம் தமிழகத்தின் கோயம்புத்தூரின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது. நெம்மாறா வட்டத்திலுள்ள 23 கிராமப் பஞ்சாயத்துகளில் 31 கோயில்கள் கண்ணகிக் கோயில்களாக அமைந்திருக்கின்றன.

இவ்வியலில் கண்ணகியை பெருந்தெய்வமாக வழிபடும் முறையும், வெகுசனத் தெய்வமாகவும், வீட்டுத் தெய்வமாகவும், குடும்பத் தெய்வமாகவும் மக்கள் வழிபடும் விதமும் விளக்கப்பட்டுள்ளது. கண்ணகிக்குக் காவல் தெய்வங்களாக கண்டமுத்தன், கண்டகர்ணன் என இரண்டு ஆண் தெய்வங்கள் இருப்பதாகவும், அவ்விருவரையும் குறிப்பிட்ட சில கிராமப்பகுதிகளிலுள்ள 150 குடும்பங்கள் சிறுதெய்வமாக வைத்து வழிபடக்கூடிய முறைமையையும் இவ்வியல் விளக்குகிறது.

சிலப்பதிகாரம் காப்பியமாக வந்து புகழ்பெறும் முன்பே, கண்ணகி தெய்வாம்சம் பெற்ற ஒரு பெண்ணாகப் போற்றப்பட்டு, பெண் தெய்வமாக வழிபடப்பட்டு வந்திருக்கிறாள் என்பதற்கான சான்றுகள், தமிழகத்தைவிட, கேரள நாட்டுப்புறக் கூறுகளில் மிகப்பரவலாகக் காணப்படுகின்றன.

தமிழகத்தில், சிலப்பதிகாரம் என்ற காப்பியம் எழுதப்பட்ட பிறகு மட்டுமே, கண்ணகி என்ற பெண் குறித்த செய்திகள் பரவலாக்கப்பட்டன என்ற ஒரு பொதுப் புரிதல் நம்மிடையே வழங்கப்படுகிறது. கேரள நாட்டுப்புறவியல் ஆய்வுகள், இதற்கு எதிர்மறையான கருத்துக்களை முன்வைக்கின்றன. கற்புக் கனலியாகத் தமிழகத்தில் போற்றப்படும் கண்ணகி, கேரளத்தில் முற்றிலும் வேறுபட்ட ஒரு வடிவில் போற்றப்படவும் வழிபடப்படவும் செய்யப்படுகிறாள் என்பது வியப்பூட்டுகிறது.

கண்ணகி தோற்றம் பாட்டு

கேரளத்தில் பகவதியான கண்ணகியின் பிறப்பு முதல் தெய்வமாதல் வரையிலான தோற்றக் கதையே கண்ணகி ‘தோற்றம் பாட்டு’ என்கின்றனர்.

தோற்றிக் கொண்டு வருதல் - தோற்றம் பாட்டு

கண்ணகியின் கதையில், அவள் யாரையெல்லாம் வதம் செய்கிறாளோ அவர்களை மீண்டும் “தோற்றிக் கொண்டு வருதல்” என்றால் மீண்டும் உயிர்பித்தல் என்று பொருள். அதன் காரணத்தாலும் இதனை “தோற்றம் பாட்டு” என்று சிலர் கூறுவர்.

தோற்றம் பாட்டின் அமைப்புமுறை

தோற்றம் பாட்டு என்பது பகவதி பற்றிய கண்ணகி கதைப்பாடல் ஆகும். இப்பாடல் பெரும்பாலும் அனைத்து பகவதி கோயில்களிலும் ஏழு நாட்கள் பாலக்காடு மாவட்டத்தைச் சேர்ந்த வண்ணான் இனத்தவரால் பாடப்படுவதாகும்.

தோற்றம் பாட்டு கண்ணகி தேவியைக் குறித்த வரலாற்றுப் பாடல் ஆதலால் இது முழுக்க முழுக்க பக்திப் பாடலாகவே கருதப்படுகிறது. வண்ணார் இனத்தவர் ஐந்து அல்லது ஆறு பேர் கொண்ட குழுவாக சேர்ந்து வாழ்க தாளத்தை முதலாவதாகக் கொண்டு ஆரம்பித்து கண்ணகி கொடுங்கல்லூர் சென்று கருவறையில் அமர்தல் வரை 96 தாளங்களாகப் பாடுவர். கேரள வாய்மொழி இலக்கியங்களான தோற்றம் பாட்டு,

தன்னாரப் பாட்டு, புள்ளுவன் பாட்டு போன்ற கதைப்பாடல்களில் கூறப்படும் கண்ணகிக் கதை சிலப்பதிகாரத்துடன் கொண்டிருக்கிற தொடர்பு என்பதையும் விளக்குகிறது. கண்ணகிக்குப் பாடப்படும் 'தோற்றம்' பாட்டில், கண்ணகியைச் சிவபெருமானின் மகள் என்றும், பார்வதியின் மறுஅவதாரம் என்றும் பலநிலைகளில் பாடுகின்றனர். அதனை,

'மலர்ந்ந ஶ்ரீபூமிமேல் கவிழ்ந்நோ ராகாசம்
ஸகல புவாரத்தே முடிப்பானும் ங்ஙாயி
பரலோ கத்தின் வெளுவில்லா ஞம்மளே
பரமேஸ்வரன்டே த்ரிக்கண்ணில் பிறந்நம்மா ங்ஙாயி'

என்ற கண்ணகி தேவியின் பிறப்பு குறித்த பாடல் அவள் சிவபெருமானின் நெற்றிக்கண்ணினின்று பிறந்தவள் என்பதைக் குறிப்பிடுகிறது. மலர்ந்திருக்கின்ற இப்பூவுலகும், ஆகாயத்தையும் உடைய இக்கோளத்தைச் சேர்ந்த அறியாமையுடைய மக்களிடையே, சிவபெருமானின் மூன்றாவது திருக்கண்ணிலிருந்து பிறந்தவள் அம்மா என்பது இப்பாடல் உணர்த்தும் பொருளாகும். இப்பாடல் வண்ணார் (ஆடை வெளுப்பவர்) இனத்தவரால் 7 நாட்கள் இரவும், பகலுமாக பலர் சேர்ந்த குழுவாக இணைந்து பாடப்படுகிறது.

இப்பாடலில் 32 சொல்படிகள் அமைந்துள்ளது. **சொல்படிகள்** எனப்படுவது, கதைப்பாடலுக்கு நடுவே குழுவின் தலைவர் கதையைப் பாட்டாகப் பாடாமல் கதையாகக் கூறுவார். அக்கதைக்கு குழுவிலுள்ள பிறர் ஆமாம் போடுவர். இப்படி கண்ணகி தோற்றம் பாட்டில் உள்ள சொல்படிகள் மொத்தம் முப்பத்திரெண்டாகும். அவற்றுள்,

சோற் மருதக் கோட்டையோடு புறப்பட்டு
இங்கு மாதொரு மற்று மலகடந்நு
அங்கும் மற்றுமலநாட்டில் செந்நு மெய்யணஞ்சு
நாயன் மாருடே படி கடந்நு
நம்பூதிரி மனஇல்ல ஓடிப் புறப்பட்டு
பட்டன் மாருடே கிராமங் கடந்நு
பிராமணர் மனஇல்ல ஓடிப் புறப்பட்டு

இவ்வரிகள் 32 சொல்படிகளுள் ஒன்றாகும். இது பொன்மகனின் தந்தை நல்லச்சன் தன் மகனுக்காக பெண்ணைத் தேடிச் செல்லும் பகுதியைக் குறிக்கிறது.

கேரளாவில் கூறப்படும் கண்ணகி கதைப்பாடலில் கோவலனும் கண்ணகியும் பொன்மகன், பொன்மகள் என்ற பெயரிலேயே அழைக்கப்படுகின்றனர். அவர்களின் பெற்றோரை நல்லச்சன் நல்லம்மா என்றே அழைக்கின்றனர். இருவரும் முன்னர் கூறியது போல சிவபெருமானின் மக்களாதலால் சகோதர உறவுடையவர்கள். எனவே, ஒருவருக்கொருவர் மெய்தீண்டாது மாலை மாற்ற வேண்டும் என்பதை குறிக்கோளாகக் கொண்டு கதைப்பாடல்

பாடும் குழுவின் தலைவரே சூரக்கோலால் மாலை கோர்த்து தேவியின் சிலைக்குப் போடுவார். அந்த பாரம்பரியம் பல பகவதி கோவில்களில் இன்றும் வழக்கமாக நடந்து வருவதைக் காணலாம்.

தோற்றம்பாட்டின் இசைக்கருவிகள்

தோற்றம்பாட்டு பாடும்போது பாடல் குழுவினர் சில இசைக்கருவிகளைக் கையாளுவர். அதில் ஒன்று ஜால்ரம், மற்றொன்று **நந்துனி** (யாழ்). குழுவின் தலைவர் நந்துனியை வாசித்துப் பாட பிறர் ஜால்ரம் அடித்து பின்பாட்டுப் பாடுவர். நந்துனி கேரளாவில் புலம் பாட்டுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் ஒரு இசைக்கருவியாகும்.

சாமியாடுதல்

இக்கதைப்பாடலில் கோவலன் கண்ணகியினுடைய திருமணம் பாடப்படும் பகுதி மிகவும் ஆர்வத்துடனும் ஆவேசத்துடனும் பாடப்படும் பகுதியாகும். தன்னுடைய வீட்டில் நடத்தப்படும் திருமணம் போலவே மிகவும் கோலாகலமாகக் கொண்டாட்டத்துடன் பாடப்படும் பகுதி திருமணப்பகுதி. கோவலன் கண்ணகி திருமணப் பாடலைக் கேட்கும் நாட்டுப்புற மக்கள் அப்பாடலில் உருகி அவர்கள் அருள் வந்து ஆடுவர். அதனை கேரளத்தில் **“வெளிச்சப்பாடு உறைதல்”** என்பர். தமிழகத்தில் சாமியாடுதல் என்பர்.

களம் எழுத்து

தோற்றம் பாட்டு பாடுவதற்கு முன்னதாக பாடல் குழுவினர் மலையாள மாதமான விருச்சிக மாதம் முதல் நாளன்று கூறையமைத்து விரதமிருப்பர். கூறையிடுதல் என்பது ஒரு தனி சடங்காகும். அமர்ந்து பாடும் இடத்தில் பந்தல் அமைத்து பந்தலின் நடுவே களம் எழுதுவர். களம் எழுத்து ஐவண்ணப் பொடிகளால் தேவியின் உருவப்படம் வரையப்படுவதாகும். ஐவண்ணப் பொடிகள் அனைத்தும் இயற்கையாகத் தயாரிக்கப்படும் பொடிகளாகும்.

களம் எழுத்து முக்கியமாக பாடலை தேவிக்காகப் பாடிப்பாடி தேவியை அந்தக் களத்தினுள் அமரச் செய்து அவர்கள் தேவியின் முன்னர் அமர்ந்து பாடுவது போல ஒரு நம்பிக்கையை உருவாக்கிக் கொண்டு பாடுவர். களத்தினுள் தேவி அமர்ந்து தங்களுடைய பாடலைக் கேட்டு இன்பமுறுகிறாள் என்ற நம்பிக்கையோடு இவ்வகை சடங்குகள் இன்றைக்கும் நடைபெறுகின்றன.

பால்கெண்டி வைத்தல்

களம் எழுத்து முடிந்தவுடன், பகவதி கோவிலினுள் லட்சம் மலர்களால் பூசை செய்த பால் நிறைத்த கெண்டியை வாழை மட்டைகளாலும் குருத்தோலைகளாலும் அமைத்த கூடாரம் போன்ற பெட்டியினுள் வைப்பர்.

பால் கெண்டியை மும்மூர்த்திகளாகக் கருதி வழிபடுகின்றனர். கெண்டியின் வாய்ப்பகுதி சிவபெருமானாகவும், மூக்குப்பகுதி பிரம்மாவாகவும், கெண்டியில் ஊற்றிய பால் திருமாலாகவும் பாலில் இட்ட பணம் திருமாலின் மனைவி மகாலட்சுமியாகவும் பாவித்து வழிபடுவர். இவர்கள் அறுவரின் முன்னிலையிலும் கோவலன் கண்ணகி உருவச்சிலையின் முன்னிலையிலும் தோற்றம் பாட்டினைப் பாடுவர். இதைப் போலவே பல்வேறு வாய்மொழி இலக்கியங்களும் கண்ணகி கதையினை பல்வேறு விதமாகக் கூறுவதை இவ்வியல் விளக்குகிறது.

கேரளத்தில் தவறுகளைத் தட்டிக் கேட்கும் ஒரு வீரப்பெண் என்ற நிலையில் மட்டுமே கண்ணகிப் போற்றப்படுகிறாள். கற்பின் அடையாளமாகக் கண்ணகி விளங்குவதை கேரள மக்கள் அறிந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இலங்கையில் இதிலிருந்து மாறுபட்டு மழைத் தெய்வமாக, தாய்த் தெய்வமாகக் கண்ணகி வணங்கப்படுவதைக் காண முடிகிறது. ஒரே கதை, மாறுபட்ட சூழல்களில் வெவ்வேறு நிலையில் உள்வாங்கப்பட்டு, மாறுபட்ட வெளியீட்டு வடிவங்களாகச் செயலாக்கம் பெற்றிருப்பதைக் கண்ணகித் தொன்மம் நமக்குப் புலப்படுத்துகிறது. அந்தந்தச் சமூகத்தில், சமகாலத் தேவைகள் எந்தக் கூறை உள்வாங்குவது என்பதைத் தீர்மானிக்கின்றன.

சங்கம் மருவிய காலத் தமிழகச் சூழலில், தனிமனித ஒழுக்கம் போற்றப்படாமல், ஒழுக்க நெறிகள் பின்பற்றப்படாமல் இருந்த, திருவள்ளுவர் சாடும் பிறன்மனை நோக்கும் வழக்கம் கொண்டிருந்த ஒரு சமூகத்தில், கற்புக் கனலியாக, மாதிரிப் பெண்ணாக, கண்ணகி போன்ற ஒரு பெண் தேவைப்பட்டாள். நாட்டு சிற்றரசர்களின் கொடுங்கோலாட்சியில், சட்டம், ஒழுங்கு காக்கப்படாமல் கடுமையான ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு, செயலிழந்து நின்ற மக்களுக்குக் கண்ணகியைப் போன்று நீதி கேட்கும், தவறுகளைத் தண்டிக்கும் ஒரு பெண் தேவைப்பட்டாள் என்பது கேரளப் பின்னணியாகும். அதற்கேற்ற நிலையில் கேரளத்தில் கண்ணகி உள்வாங்கப்பட்டு வணங்கப்படுகிறாள்.

இயல் - 4: வழிபாட்டு மரபுகளில் கண்ணகி

வழிபாட்டு மரபுகளாக, நாட்டுப்புற வழக்காறுகளைக் கூற முடிகிறது. கதைப்பாடல், தெருக்கூத்து, நாடகம், கும்மி, தாலாட்டு, இசைப்பாடல், கீர்த்தனை, வில்லுப்பாட்டு குறத்திப்பாட்டு, குரவைக் கூத்து ஆகியன குறித்த செய்திகளும், ஊடகங்களான நாடகம்,

திரைப்படம், தொலைக்காட்சித் தொடர், வானொலி போன்றவற்றில் கண்ணகி கதைகள் வெளியிடப்படுவது குறித்தும் இவ்வியல் விளக்குகிறது.

மேலும், கண்ணகிக் கோயில்களில் எடுக்கப்படும் திருவிழாக்கள், சடங்குகள் போன்றவை இவ்வியலில் கூறப்பட்டுள்ளன. நெம்மாறா பகுதியின் 'நெல்லிக்குளங்கரா பகவதி கோயில்' மிக முக்கியமான கோயிலாகும். கண்ணகியின் தோற்றம் பாட்டு, அங்கே 7 நாட்கள் பாடப்படுகிறது. 'நெம்மாறா வேல மஹோத்ஸவம்' அக்கோயிலின் சிறப்பாகக் கொண்டாடப்படும் திருவிழாவாகும். பந்தல் நடல், வெடி வழிபாடுகள், களம் எழுத்து, தோற்றம் பாட்டு, யானை எழுநள்ளல் போன்றன அங்கே வெகு சிறப்பாக நடைபெறுகிறது. பல்வேறு மாவட்டங்களிலிருந்தும், மக்கள் திரண்டு சேர்கின்றனர். இது போல நெம்மாறா பகுதியில் உள்ள பிற பகவதி கோயில்கள் குறித்த செய்திகளும் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன.

தொகுப்புரை

- சிலப்பதிகாரத்தின் சிறப்பு, கண்ணகியின் தோற்றம், அழகு, திருமணச் சடங்குகள், கண்ணகியின் கற்பு, கண்ணகியின் இல்லற மாண்புகள், சுற்றத்தாரை ஓம்புதல், அறநெறியாளரை ஓம்புதல், விருந்தினரைப் பேணுதல் போன்ற நற்பண்புகள், கண்ணகியின் மெய்ப்பாடுகள், துயரத்திலும் துணிவுறல், புன்முறுவல் கொள்ளல், துன்பம் உற்ற போதும் கணவன் மீது காதல் கொள்ளல் போன்ற கண்ணகியின் உயர்ந்த பண்புகள் விளக்கப்பட்டுள்ளன.
- மேலும், கணவனுக்குத் துன்பம் நேர்ந்தபோது அவருக்காக வழக்குரையிடல், சீற்றம் கொண்டு மதுரையை அழித்தல், கண்ணீரின் ஆற்றல், கோபத்திலும் கண்ணகியின் ஈரத்தன்மை, சீற்றம் தணிதல், நெடுவேள்குன்றம் அடைதல், தெய்வமாதல் போன்றன ஆராயப்பட்டுள்ளன.
- கண்ணகி கோவலன் மீது ஊடல் கொள்ளாததன் காரணம், தற்காத்தல், - சொற்காத்தல் பண்பு போன்றன இதில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.
- கண்ணகியின் உயர்ந்த பண்புகளை அறிந்து இக்காலப் பெண்கள் கண்ணகியை முன்மாதிரியாகக் கொண்டு வழிநடக்க வேண்டுமென்பது விளக்கப்பட்டுள்ளது.
- தாய்த்தெய்வ வழிபாடு குறித்தும், தமிழகத்தைத் தாண்டி கேரளத்திலும், இலங்கையிலும் பகவதி என்றும் 'பத்தினித் தெய்யோ' (கண்ணகித் தெய்வம்) என்றும் கண்ணகி எனும் தாய்த் தெய்வத்தை வழிபடும் மரபுகள் ஆராயப்பட்டுள்ளன.

- பாலக்காடு மாவட்ட நெம்மாறா பகுதி கிராம மக்களின் பண்பாடு, கலாச்சாரம், கண்ணகி வழிபாட்டின் வாயிலாகவும், வாய்மொழி இலக்கியங்கள் மூலம் அறிந்த கதைகளின் வாயிலாகவும் அராய்ந்து அறியப்பட்டுள்ளது.
- நெம்மாறா வட்டதில் அமைந்துள்ள கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள், சடங்குகள், நம்பிக்கைகள் போன்றன ஆராயப்பட்டுள்ளன.

பரிந்துரைகள்

'கேரளாவில் நெம்மாறா வட்டத்தில் கண்ணகி வழிபாடு' என்னும் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது, கேரள மக்களின் பண்பாட்டினையும் கலாசாரத்தையும் பகவதி வழிபாட்டு மரபுகளையும் வளரும் சமுதாயத்துக்கு எடுத்துச் சொல்வதாக அமைந்துள்ளது. கண்ணகி வழிபாடு மேலும் பல ஆய்வுகளைச் செய்ய வழிவகுக்கும். சான்றாக,

- சிலப்பதிகாரமும் மலையாள மொழிபெயர்ப்புகளும் - ஓர் ஆய்வு
- சிலப்பதிகாரமும் கேரள நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் - ஒப்பாய்வு
- இலங்கையில் பத்தினித் தெய்யோ (கண்ணகித் தெய்வம்) வழிபாடு

இத்தலைப்புகளிலும் ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.